an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 6.4 - உழைப்பே மூலதனம்

GRADE- VI

## கட்டுரை

**முன்னுரை:**

“உழைப்பே உயர்வு தரும்” என்பார்கள் சான்றோர்கள், உழைப்பின் உயர்வை “உழைப்பே மூலதனம் ” என்னும் கதையின் மூலம் அறியலாம்.

**அருளப்பர் விடைபெற்றுச் செல்லல் :**

பூங்குளம் என்னும் ஊரில் அருளப்பர் என்னும் வணிகர் இருந்தார். ஒருமுறை அவர் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டி இருந்ததால் தமது பிள்ளைகளான வளவன், அமுதா, எழிலன் ஆகியோருக்குத் தனித்தனியாக ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தார். அதனைக் கவனமாகப் பாதுகாத்துத் தனக்குத் திருப்பித் தரவேண்டும் என்று கூறிவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று விட்டார்.

**பிள்ளைகளின் ஆலோனை:**

நமது திறமையை எடைபோடவே தந்தை நமக்குப் பணத்தைக் கொடுத்திருக்கிறார் என்றான் வளவன். நானும் அப்படித்தான் நினைக்கிறேன் என்றாள் அமுதா. நான் அப்படி நினைக்கவில்லை. பணத்தைப் பாதுகாக்கத் தெரிகிறதா என்று பார்க்கவே கொடுத்திருக்கிறார்" என்றான் எழிலன்.

**வளவனின் செயல்:**

வளவன் உழவுத்தொழிலில் ஆர்வம் உடையவன். தந்தை கொடுத்த பணத்தில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தான். உழுது, பண்படுத்திக் காய்கறித் தோட்டம் அமைத்தான். நாள்தோறும் கவனமுடன்

பாதுகாத்தான். தோட்டம் முழுவதும் அவரை, வெண்டை, கத்தரி, பாகற்காய் முதல் காய்கள் காய்த்துக் குலுங்கின. அவற்றை நகரத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்தான்.

**அமுதாவின் செயல்:**

அமுதாவிற்கு ஆடு, மாடுகள் வளர்ப்பதில் விருப்பம் அதிகம். தந்தை கொடுத்த பணத்தில் நாட்டுப் பசுக்கள் சிலவற்றை வாங்கினாள். அவற்றை அன்போடு பராமரித்தாள். அவை தந்த பாலை வீடு வீடாகச் சென்று விற்றாள். மேலும் தயிர், வெண்ணெய், நெய் போன்றவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விற்றுப் பொருள் ஈட்டினாள்.

**எழிலனின் செயல்:**

எழிலன் தந்தை கொடுத்த பணத்தைப் பத்திரமாக வைத்திருந்து மீண்டும் தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும் என முடிவு செய்தான். வீட்டில் இருந்தால் தொலைந்து விடும் என்பதால் பணத்தை வங்கியில் உள்ள பாதுகாப்புப் பெட்டக அறையில் பாதுகாப்பாக வைத்தான்.

**அருளப்பரிடம் மூவரும் கூறிய பதில்கள்:**

வளவன் வேளாண் தொழில் செய்வதாகவும், அமுதா பசு மாடுகளை வளர்த்ததாகவும், எழிலன் பணத்தை வங்கியில் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும் கூறினார்கள். அருளப்பர் வளவன், அமுதாவை பாராட்டி பரிசு கொடுத்தார். பிறகு எழிலனிடம் பணத்தை நாம் பயனுள்ள வகையில் உபயோகித்து முன்னேற வேண்டும் அதுவே மனிதனின் கடமை என்றார்.

**முடிவுரை:**

எழிலன் தனது தவற்றை உணர்ந்து தந்தையிடம் தொழில் கற்று முன்னேற வேண்டும் என்று முடிவு செய்தான்.